Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 2 / 2022

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.8**

| | | | |
|---|---|---|---|
| Name: | செந்தில்குமார் | Calling: | உதவி மருத்துவர் |
| Father's / Husband's Name: | தேவராஜ் | Religion: | |
| Village: | செக்குமேடு | Age: | 39 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.07.2025

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 8 முதன்மை விசாரணை

நான் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 12.09.2021ம் தேதி பணியில் இருந்தபோது இரவு 11.30 மணிக்கு 1.மலர், வயது 48, க/பெ மணிமாறன், கொத்தகோட்டை கிராமம், வாணியம்பாடி 2.அருண்குமார் வயது 32, க/பெ மணிமாறன், கொத்தகோட்டை கிராமம், வாணியம்பாடி ஆகியோர்கள் அடிதடி வழக்கில் காயமுற்று சிகிச்சைக்கு வந்தார்கள். அவர்களை பரிசோதித்து காயங்களை விபத்து பதிவேட்டில் குறித்து கொண்டு மேற்படி நபர்களுக்கு சிகிச்சையளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். மேற்படி நபர்களை பரிசோதித்தபோது மலருக்கு மேற்பல் உடைந்திருந்தது. இடது கை மணிக்கட்டு வீங்கிய நிலையில் இருந்தது. அருண்குமாருக்கு காயங்கள் எதுவும் இல்லை. அவர்களை யார் அடித்தார், எதனால் அடித்தார்கள் என்று என்னிடம் கூறவில்லை. மேற்படி காயத்தின் தன்மையை கொண்டு மலர் என்பவருக்கு

கொடுங்காயம் என சான்று வழங்கினேன். **மலரின் காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

மலர் என்பவருக்கு உடைந்திருந்த பல் வரிசையின் வகை என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் மேற்கடவாய்பல். ஒரு நபர் கீழே விழுந்தால் கூட பல் உடைவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான் இந்த மருத்துவசான்றிதழை மேற்படி நபர் சிகிச்சைக்கு சேர்ந்தபோதே எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை, 06.11.2021ம் தேதி கொடுத்தேன். மேற்படி நபர்கள் சிகிச்சைக்கு வந்தபோது அவர்களின் பெயர், அவர்களுக்கு என்ன காயம் ஏற்பட்டுள்ளது, எங்கு காயம் ஏற்பட்டுள்ளது போன்ற விவரங்களை அன்றைய தினமே பதிவு செய்தேனா என்றால் அல்லது குறிப்பு மட்டும் எடுத்துக்கொண்டேனா என்றால் அன்றைய தினமே விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். காயச்சான்றிதழில் குற்ற எண், சட்டப்பிரிவுகள் எழுதியுள்ள நிலையில் அதை நான் எழுதினேனா அல்லது போலிசார் எழுதினார்களா என்றால் போலிசார் பென்சில் மூலம் எழுதியுள்ளார்கள். நான் கொடுத்த சான்றிதழில் என்ன எழுதியிருந்தாலும் நான் தான் பொறுப்பு என்றால் நான் கொடுக்கும்போது பென்சிலால் எழுதப்பட்ட விவரம் எதுவும் இல்லை. மருத்துவசான்றிதழ் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) செந்தில் குமார்

SRIPATHI K — Digitally signed by SRIPATHI K